ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2253/20 - 2021 නොවැම්බර් මස 10 වැනි බදාදා - 2021.11.10

*2253/20 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ் தலவாக்கலை லிந்துலை நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

தலவாக்கலை லிந்துலை நகர சபை உறுப்பினர் ஒருவரின் பதவி கட்சி அங்கத்துவம் இல்லாதொழிந்தமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ், தலவாக்கலை லிந்துலை நகர சபை இல. 03, தலவாக்கலை தெற்கு வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மயில்வாகனம் பரமநாதன் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான தலவாக்கலை லிந்துலை நகர சபை இல. 03, தலவாக்கலை தெற்கு வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஒருகந்த லியனகே அசங்க சம்பத் பீரிஸ் என்பவரைப் பெயர் குறித்து நியதிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது, தலவாக்கலை லிந்துலை நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் கலுகம்பிட்டிய அப்புஹாமிலாகே லஹிரு ஷானக கலுகம்பிட்டிய ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ஒருகந்த லியனகே அசங்க சம்பத் பீரிஸ் என்பவர் தலவாக்கலை லிந்துலை நகர சபை இல. 03, தலவாக்கலை தெற்கு வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**கலுகம்பிட்டிய அப்புஹாமிலாகே லஹிரு ஷானக கலுகம்பிட்டிய,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
தலவாக்கலை லிந்துலை நகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
நுவரெலியா,
2021, நவெம்பர் 08.

1A - G 35311 — 20 (2021/11)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*